(1) பேரவையிலிருந்து செய்தி—தொடர்ச்சி.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, சட்டமன்ற மேலவையின் இசைவிற்காக மாண்புமிகு பேரவைத் தலைவரால் கையொப்பமிட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ள தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு பகுதி நேரக் கிராம அலுவலர் பதவிகள் நீக்கச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/1981) பிரதியை மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன்.

4. அரசின் தீர்மானம்.

(2) அலுவல் வரிசையில் மாற்றம் குறித்து.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே,

"மேலவை விதி 21 (3)ன் கீழ் இன்றைய நிகழ்ச்சி நிரலில் மூன்றாவது இனமான தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பகுதி நேரக் கிராம அலுவலர் பதவிகள் நீக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1981) முதலிலே எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."
என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அதை முன் உள்ள பிரச்சினை—

"மேலவை விதி 21 (3)ன் கீழ் இன்றைய நிகழ்ச்சி நிரலில் மூன்றாவது இனமான தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பகுதி நேரக் கிராம அலுவலர் பதவிகள் நீக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/1981) முதலிலே எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

5. அரசினர் சட்ட முன்வடிவு

தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பகுதி நேரக் கிராம அலுவலர் பதவிகள் நீக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1981.)

* **திரு. க. இராமமூர்த்தி** On a point of order மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இந்தச் சட்ட முன்வடிவு புதிதாகப் பல்வேறு பணிகளுக்குப் பணியாளர்களைத் தேர்ந்தெடுப்பது தொடர்பாக அமைந்திருக்கிறது.